# கல்நேவ பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 யூலை 13 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் கல்நேவ பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்நேவ பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி | | |
|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் விடுபாடுகள் | 01 | 14,191 | - | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | - | 17,446 | - |
| (இ) | நிதிக்கூற்றுகளில் முறையற்ற வெளிப்படுத்தல்கள் | 04 | - | - | 61 |
| | -மேற்படி- | 18 | - | - | 17 |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 197,265 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 222,576 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 58,252,787 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஜாதிக சவிய, கமநெகும, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்ற நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் செய்யப்பட்ட வேலைகளுக்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 13,899,147 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 773,121 தொகை 2010 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்குரிய வேலைகளுக்காக கிடைக்க வேண்டிய மூலதன உதவிகளாகும்.

(ஆ) ஜாதிக சவிய, கமநெகும, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்ற நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ்

செய்யப்பட்ட வேலைகளுக்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை ரூபா 16,997,749 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,254,146 தொகை 2010 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்குரிய வேலைகளுக்காக செலுத்த வேண்டிய தொகையாகும்.

(இ) சபையில் சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்காக சபையின் பங்களிப்பாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பணம் ரூபா 95,204 ஆக இருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,277,948 ஆக இருந்ததுடன், அதற்கு நேர்ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,783 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 839 | 991 | 0 |
| (ii) | வாடகை | 1,077 | 959 | 180 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 197 | 125 | 120 |
| (iv) | ஏனைய வருமானம் | 10,745 | 9,138 | 2,413 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 654,885 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 9,955 |

### 2.2.3 ஆதன வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்கண்டு பகிரங்கப்படுத்தப்பட்டு அந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசையாத சொத்துக்களின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் வரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கான வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சொத்துக்களில் ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி அறவிடப்படாத சந்தர்ப்பங்களில் சபையினால் அந்தக் காணியின் மூலதன நிலப் பெறுமதியில் 2% இனை விஞ்சாத அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் அடிப்படையில் வரியாக வருடாந்தம் அந்தக் காணியின் உரிமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 வாடகை மற்றும் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) மற்றும் 162 ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 2,697,562 தொகையான நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை வாடகை ரூபா 1,243,721 தொகையும், 01 வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடைப்பட்ட நிலுவை வாடகை ரூபா 331,986 தொகையும் இருந்தன.

## 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 745,188 பெறுமதியான 24 சொத்து விடயங்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) சபையினால் 05 வருடங்களுக்கு முன்னர் ரூபா 240,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட 30 தார் பெரல்கள் கணக்காய்வுத் திகதியான 2012 மே 17 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 ஒப்பந்த நிருவாகம்

2011 இன் மாகாண பிரதேச அபிவிருத்தி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 285,000 தொகையான 11 வேலைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தச் சங்கங்கள் முன்வராமையினால் கணக்காய்வுத் திகதியான 2012 மே 17 ஆந் திகதி வரையிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கட்டிட அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக 13 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் 8 இற்கு மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட 8 இல் ஒன்றுக்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய அனுமதிப்பத்திரதாரிகளும் விண்ணப்பதாரிகளும் அனுமதியின்றி நிர்மாணித்த கட்டிடங்கள் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வ அறிக்கையின் பிரகாரம் சபையினால் நடாத்தப்படுகின்ற கல்நேவ மற்றும் நேகம்பஹ நூலகங்களில் காணமல் போன ரூபா 38,350 பெறுமதியான 531 புத்தகங்களின் நட்டத்தை பொறுப்புவாய்ந்தவர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 10 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களுக்காக அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்ட 08 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,008,984 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் அப் பதவிகளை

நிரந்தரமாக்குவதற்கோ அல்லது சம்பள மீளளிப்பைச் செய்வதற்கோ சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி சபையினால் இரண்டு நூலக உதவியாளர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 120,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தன.

(உ) சபையின் நானாவித வருமான விடயத்தின் கீழ் அறவிடப்பட்ட ரூபா 53,820 தொகையான முத்திரைக் கட்டணம் 2006 இன் 10 ஆம் இலக்க முத்திரைக் கட்டண விஷேட ஏற்பாடுகள் அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தலுக்கமைய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் 5.1 ஆம் செயற்பாட்டின் பிரகாரம் பிரதேசத்தில் டெங்குநோய் ஒழிப்புத் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துதல் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்பாடுகள் போதியளவில் சபையினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 78 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பிரதேச சபைகளிலும் உள்ள பகுதிகளை உள்ளடக்கி பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் செயற்பாடுகளுக்காக அதிகாரமுள்ள நிறுவனமாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்களுக்காக மீளாய்வாண்டில் சபை முன்வந்திருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் கட்டுப்பாடு